

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக செயலாளர்கள், வட்டக்கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்– அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## தெலுங்கானா அருகே ஓடும் ரயிலில் தீ விபத்து!

ஐதராபாத், ஜூலை 8-

தெலுங்கானா அருகே சென்றுகொண்டிருந்த பயணிகள் விரைவு ரயில் திடீரென தீப்பிடித்த நிகழ்வு அப்பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது.

ஹவுராவில் இருந்து செகந்திராபாத் வந்த “ஃபலக்னுமா” பயணிகள் விரைவு ரயில், தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் அருகே திடீரென தீப்பிடித்தது.

இதனைப் பார்த்த ரயில் ஓட்டுநர் உடனடியாக ரயிலை நிறுத்தியதால், பயணிகள் பதற்றத்துடன் ரயிலில் இருந்து கீழே இறங்கினர். இந்த விபத்தில், ஃபலக்னுமா எக்ஸ்பிரஸ் ரயிலின் 3 பெட்டிகள் சேதமடைந்துள்ளன. விபத்தில் பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக ஓயாமல் குரல் கொடுத்த

# ‘திராவிட மணி’ இரட்டைமலை சீனிவாசனாரின் பங்களிப்பை நன்றியுடன் நினைவுகூர்வோம்!

### பிறந்த நாளையொட்டி வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!


**சென்னை, ஜூலை 8-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'திராவிட மணி' இரட்டைமலை சீனிவாசனாரின் பிறந்த நாளையொட்டி சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் “ஒடுக்கப்பட்ட சமூகங்களின் விடியலுக்காக” ஓயாமல் குரல் கொடுத்த ‘திராவிட மணி’ இரட்டை மலை சீனிவாசனாரின் பங்களிப்புகளை நன்றியுடன் ‘நினைவுகூர்வோம்!’ என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வரின் வலைதளப் பதிவு வருமாறு:-

தான் பெற்ற கல்வியறிவைக் கொண்டு, ஆதிதிராவிடர்கள் மீது நடத்தப்பட்ட கொடுமைகளுக்கு எதிராகப் போராடிய தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாள்!

இலண்டன் சென்று ஐந்தாம் ஜார்ஜ் மன்னரைச் சந்தித்தபோதும், அச்சம் என்பதே இன்றி, அவருடன் கை குலுக்க மறுத்து, இந்தியாவில் நிகழ்ந்து வரும் தீண்டாமைக் கொடுமைகளை எடுத்துக் கூறியதுதான் அவரது நெஞ்சுரம்.



வட்டமேசை மாநாட்டில் அண்ணல் அம்பேத்கருடன் நகமும் சதையும் போல இணைந்து தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகப் பேசினார்.

ஒடுக்கப்பட்ட சமூகங்களின் விடிவுக்காக ஓயாமல் குரல் கொடுத்த 'திராவிடமணி' இரட்டைமலை சீனிவாசனாரின் பங்களிப்புகளை நன்றியுடன் நினைவுகூர்வோம்!

சமத்துவத்துக்கான பயணத்தில் சமரசம் தவிர்த்து வெல்வோம்!

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிலேயே எலெக்ட்ரானிக்ஸ் பொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம்!

# சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு!

### மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஜூலை 8-

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 7.7.2023 வெள்ளிக் கிழமை அன்று, சென்னை, வில்லிவாக்கம், சிட்கோ நகர், இராஜராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம் கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப்சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்: ப.ரங்கநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே..மூர்த்தி, கே.சந்துரு, கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார் மற்றும் பரிதி இளம்சுருதி, மாவட்ட நிர்வாகிகள்: தேவ ஜவஹர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராஜன், பகுதிக் கழக செயலாளர்கள்: கூ.பி.ஜெயின், வே.வாசு, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், பி.உதயசங்கர், சரிதா மகேஷ்குமார், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், ஆர்.கலைச்செல்வி, ஏ.பி.பூர்ணிமா,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: க.வினோத், ஜி.ஜே.பிரபு, ஆர்.தனசேகர், ஆர்.டி.சங்கர் நானா, வானவில் விஜய், எல்.பி.எப். மோகன், ஜி.தாமோதரன், எம்.பிரோஸ்கான், பி.விஜய்குமார், எம்.விநாயகம், துரைக்கண்ணன், மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, எல்.சம்பத்குமார், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன், மற்றும் வட்ட கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் சிட்கோ.சேகர் நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

சிறு மழை பெய்தாலும் தண்ணீர் தேங்கி போக்குவரத்திற்கு பயனற்றதாக திகழ்ந்த ஸ்டீபன்சன் சாலையில் புதிய மேம்பாலம் கட்டி போக்குவரத்தை சீராக்கியது மட்டுமல்லாமல் அம்மேம்பாலத்திற்கு பெரம்பூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செங்கை சிவம் அவர்களின் பெயர் சூட்டி மகிழ்ந்த முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

2030-ஆம் ஆண்டுக்குள் 1 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ்நாட்டை மாற்ற வேண்டும் என்ற இலக்கோடு பயணித்துக் கொண்டிருக்கின்ற கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் குறிக்கோள் நிச்சயம் நிறைவேறும் என்பதற்கு வெளியிடப்பட்ட புள்ளி விவரப்படி கடந்த இரண்டு ஆண்டுகளில் எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு ஒட்டுமொத்த இந்தியாவில் முதலிடம் பெற்றதே சான்று.

இப்பெருமைக்கு காரணமான கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பாராட்டி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

ஏதேச்சதிகார பாசிச பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்தவும், மக்களாட்சியை, மதச்சார்பின்மையை, பன்முகத் தன்மையை, ஒடுக்கப்பட்ட மக்களை, ஏழை எளிய மக்களை காப்பாற்றவும் பீகார் மாநிலத்தில் ஒருமித்த எண்ணம் கொண்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் நம் தலைவர் அவர்கள் 2023 ஜுன் 23ல் கூடினோம். 2024 மே மாதம் வெற்றி பெற்றோம் என்றளவில் ஒற்றுமையோடு பயணிப்போம் என்றுரைத்து எதிர்கட்சிகளின் ஒற்றுமையை வலியுறுத்திய கழகத் தலைவரை பாராட்டி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் கொண்டாடும் பொருட்டு முதற்கட்டமாக நம் மாவட்டக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்ட 40 நிகழ்ச்சிகளில் 12 நிகழ்ச்சிகள் முடிந்த நிலையில் வரவிருக்கின்ற நிகழ்ச்சிகளையும், அதனைத் தொடர்ந்து அறிவிக்கப்படவிருக்கின்ற நிகழ்ச்சிகளையும் எழுச்சியோடு நடத்தி முத்தமிழறிஞர் புகழ் பாட உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்து ராஷ்டிராவை முன்னெடுப்பதில் -

# பொது சிவில் சட்டத்திற்கு நிச்சயம் பங்குள்ளது!

### பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென் விமர்சனம்!

புதுடெல்லி, ஜூலை 8 -

பொது சிவில் சட்டம் குறித்தான விவாதம் சமீபத்தில் அதிகளவில் நடந்து வருகிறது.இந்து ராஷ்டிராவின் ஒரு பகுதியே பொது சிவில் சட்டம் என பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென் விமர்சித்துள்ளார். ‘பொது சிவில் சட்டத்தை அமல் படுத்துவதில் இனியும் தாமதம் கூடாது என்ற செய்தியைப் படித்தேன். இத்தகைய முட்டாள்தனமான யோசனை எங்கிருந்து’ வந்தது என அமர்த்தியா சென் கேள்வி எழுப்பியுள்ளார்.

2024 மக்களவைத் தேர்தலுக்கு குறுகிய காலமே இருக்கும் நிலையில், பொது சிவில் சட்டத்தை விரைந்து அமல்படுத்தி தேர்தல் ஆதாயம் பெறும் உள்நோக்கத்துடன்,அதன் மீதான கருத்துக் கேட்புக் கூட்டங் களை அவசர அவசரமாக நடத்தி வருகிறது ஒன்றிய பாஜக அரசு. இந் நிலையில், பொருளாதார அறிஞரும் நோபல் பரிசு பெற்றவருமான அமர்த்தியா சென் கூறுகையில், “வெவ்வேறு மதங்கள், அவற்றுக் கென தனித்தனி பழக்க வழக்கங்கள் சட்டங்கள் என நமக்குள் வேறு பாடுகள் உள்ளன. அந்த வேறுபாடு களை நீக்கி ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றால் பொது சிவில் சட்டம் தேவை என்று செய்தித் தாள்களில் படித்தேன். இத்தகைய முட்டாள்தனமான யோசனை எங்கிருந்து வந்தது” என அவர் கேள்வி எழுப்பினார்.

இந்து ராஷ்டிராவுடன் பொது சிவில் சட்டத்திற்கு தொடர்பு உள்ளதா? என்று செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு, “நிச்சயமாக தொடர்பு இருக்கிறது, இந்து ராஷ்டிராவை முன்னெடுப்பதில் பொது சிவில் சட்டத்திற்கு நிச்சயம் பங்குள்ளது” என்று கூறினார்.

இந்து ராஷ்டிரமே நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒரே வழி என்று கூறுவதன் மூலம் இந்து மதம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்றார். மேலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இத்தகைய சட்டம் இல்லாமல் இருந்த நம்மால் எதிர்காலத்திலும் இருக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

பிரதமர் மோடி அரசுமுறை பயணமாக அமெரிக்கா சென்ற போது முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, தான் மோடியுடன் உரையாடினால், அதன் ஒரு பகுதி, ‘இந்தியாவில் உள்ள சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் குறித்ததாக இருக்கும் என்று கூறியுள்ளது குறித்து கேட்டதற்கு, இந்தியா வர்க்கங்களாலும், மதங்களாலும், பாலினங்களாலும் வேறுபாடுகளை கொண்டுள்ளது இது மிகப் பெரிய சவால்’ என்றார் அவர்.

க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! சி.கே.வி. தமிழ்ச்செல்வன் வரவேற்புரை!

# காஞ்சிபுரம் மாநகரில் கலைஞர் நூற்றாண்டு விழா கவியரங்கம்!

### கவிஞர் விவேகா - க.செல்வம் எம்.பி. - சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

காஞ்சிபுரம், ஜூலை 8-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் மாநகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி “எத்திசையும் புகழ் மணக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் புகழ் பரப்பும் மாபெரும் கவியரங்கம்” 9.7.2023-ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.30 மணிக்கு அருணா மகால், காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். கே.ஏ. செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்துச்செல்வன், வ.ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு.சுப்பராயன், கே.திலகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கவியரங்கத்திற்கு கவிஞர் விவேகா தலைமை வகிக்கிறார்.

இதில் கவிஞர் ஆண்டாள் பிரியதர்சினி, கவிஞர் தஞ்சை இனியன், கவிஞர் பொற்கோ, கருணாநிதி, கவிஞர் இளைய கம்பன், கவிஞர் கங்கை மணிமாறன் ஆகியோர் கவிபாடுகின்றனர்.

இதில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., சன் பிராண்ட் கே.ஆறுமுகம், மேயர் எம்.மகாலட்சுமி, யுவராஜ், ஜி.சுகுமாரன், டி.அன்பழகன், பி.சுந்தரவதனன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், எஸ்.கே.பி.சீனிவாசன், எஸ்.சிகாமணி, எஸ்.சந்துரு, அ.தசரதன், சு.வெங்கடேசன், ஜி.சசிகலா, எஸ்.கே.பி. சாந்தி சீனிவாசன், எஸ்.மோகன், எஸ்.சுகுமாரன், த.விஸ்வநாதன், எஸ்.மாமல்லன், ப.சுரேஷ், பி.சங்கர், எஸ்.ரவிக்குமார், ஜெ.வரதராஜன், அ.பாலமுருகன், எஸ்.சேகர், எஸ்.வி.பிரகாஷ், அ.யுவராஜ், பி.கார்த்திகேயன், நாத்திகம் நாகராஜன், வி.மலர்மன்னன், கே.ஏ. இளங்கோவன், கே.செல்வி, சி.ராதாகிருஷ்ணன், ஏ.சசிகுமார், டி.வெங்கட்ராமன், டி.ஜெய்கணேஷ், மகேந்திரன், எஸ்.அரவிந்த் குமார், வி.இளம்பருதி, சி.எம்.பிரபு, ப.சுகுமார், எம்.தேவராஜ், ஜாபர் ஸ்ரீதர், ஆ.சதீஷ், பி.விஜயா, ஏ.சரவணன், எஸ்.தாஸ், ஜெ.தேவிகா, ஆர்.விஜயலட்சுமி மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

இ.சந்தானம் நன்றி கூறுகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! ஒருங்கிணைப்பாளர் எம்.சீனிவாசா வரவேற்புரை!

# ‘திராவிடச் சூரியன்’ அமைப்பின் சார்பில் சிறப்புக் கருத்தரங்கம்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை! ப.தாயகம் கவி - ஜெ.ரேகா பிரியதர்ஷினி சிறப்புரை!

சென்னை, ஜூலை 8-

முத்தமிழ் அறிஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு, 'திராவிடச் சூரியன்' அமைப்பின் சார்பில் சிறப்புக் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

இன்று (8.7.2023 - சனிக்கிழமை) மாலை 5.00 மணி அளவில் சென்னை - தேனாம்பேட்டை 'அன்பகத்தில்' நடைபெறும் இக்கருத்தரங்கில், 'திராவிடச் சூரியன்' அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் எம்.சீனிவாசா வரவேற்புரையாற்றுகிறார்.

இக்கருத்தரங்கிற்கு - சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும் - விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான செஞ்சி கே.எஸ். மஸ்தான் தலைமை வகிக்கிறார்.

இக்கருத்தரங்கில் - கழக துணை அமைப்புச் செயலாளர் - வழக்கறிஞர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. 'சட்டமன்றத்தில் கலைஞர்' எனும் தலைப்பிலும்,

சேலம் மாநகராட்சி முன்னாள் மேயரும், மகளிர் தொண்டரணி மாநில துணைச் செயலாளருமான ஜெ.ரேகா பிரியதர்ஷினி, "பெண்கள் முன்னேற்றத்தில் கலைஞரின் முன்னெடுப்புகள்" எனும் தலைப்பிலும் சிறப்புரையாற்றுகின்றனர்.

நிறைவாக - சோழிங்கநல்லூர் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கனிமொழி மனோகரன் நன்றி கூறுகிறார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

பே.சா.து.ந.க.எண்.பி4/1184/2023

**குறுகிய கால மின்னணு மறு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு குறுகிய கால மின்னணு மறு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT Scheme) - 2022-23**

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோரயமாக 18% GST சேர்த்து (ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் - 10 & 11ல் உள்ள 15 எண்ணிக்கையிலான உட்புற சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மேம்படுத்தும் பணி சிப்பம் 9 மற்றும் 20 (நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்) NSMT Scheme -2022-23 | 9 மற்றும் 20 | குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.87.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.97.00 இலட்சங்கள் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 20.07.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 21.07.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 3524 / ஒப்பந்தப்புள்ளி / 2023

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

பே.சா.து.ந.க.எண்.பி4/1903/2023

**குறுகிய கால மின்னணு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மறு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT Scheme) - 2023-24**

| பணியின் விவரம் | சிப்பங்களின் எண்ணிக்கை | பணியின் மதிப்பு தோரயமாக 18% GST சேர்த்து (ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் - 8 & 9ல் உள்ள 22 எண்ணிக்கையிலான உட்புற தார் சாலைகள் மேம்படுத்தும் பணி (நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்) NSMT Scheme 2023-24 | 1 | 169.00 | 169000 | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 20.07.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 21.07.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 3525 / ஒப்பந்தப்புள்ளி / 2023

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

பே.சா.து.ந.க.எண்.பி4/3464/2023

**குறுகிய கால மின்னணு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**NSMT (2023 - 24)**

| பணியின் விவரம் | பணியின் மதிப்பு தோரயமாக GST 18% சேர்த்து ரூ.இலட்சங்களில் | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|
| மண்டலம் - 6 & 7 உள்ள 10 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட் மற்றும் இன்டர்லாக் பேவர் ப்ளாக் சாலைகள் மேம்படுத்தும் பணி NSMT (2023-24) | பணியின் மதிப்பு ரூ.89.00 இலட்சம் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 20.07.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 21.07.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 3522 / ஒப்பந்தப்புள்ளி / 2023

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

பே.சா.து.ந.க.எண்.பி4/3463/2023

**குறுகிய கால மின்னணு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**NSMT (2023 - 24)**

| பணியின் விவரம் | பணியின் மதிப்பு தோரயமாக GST 18% சேர்த்து ரூ.இலட்சங்களில் | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|
| மண்டலம் 3, 4, 6 & 9ல் உள்ள 32 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் தார், சிமெண்ட் கான்கிரீட் மற்றும் இன்டர்லாக் பேவர் ப்ளாக் சாலைகள் மேம்படுத்தும் பணி NSMT (2023 - 24) | பணியின் மதிப்பு ரூ.250.00 இலட்சம் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 20.07.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 21.07.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 3523 / ஒப்பந்தப்புள்ளி / 2023

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)




திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பட்டாபிராமபுரம் ஊராட்சி விநாயகபுரம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றியம் தொடக்கப்பள்ளியில் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது இப்பள்ளி கட்டிடம் கட்ட இடம் இல்லாததால் கிராம மக்கள் அனைவரும் சேர்ந்து தனிநபரிடம் இடத்தை வாங்க முடிவு செய்தனர் இதனை அறிந்த திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தனது சொந்த பணம் ரூபாய் 1 லட்சத்தை பள்ளிக்கு வழங்கினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆர்த்தி ரவி, சி.ஜெ.சீனிவாசன், உள்பட கிராம பொதுமக்கள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.